இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"தந்தையே, உலகம் தோன்றுமுன்னே நீர் என்மீது அன்புகொண்டு எனக்கு மாட்சி அளித்தீர். நீர் என்னிடம் ஒப்படைத்தவர்கள் என் மாட்சியைக் காணுமாறு அவர்களும் நான் இருக்கும் இடத்திலேயே என்னோடு இருக்க வேண்டும் என விரும்புகிறேன். நீதியுள்ள தந்தையே, உலகு உம்மை அறியவில்லை; ஆனால் நான் உம்மை அறிந்துள்ளேன். நீரே என்னை அனுப்பினீர் என அவர்களும் அறிந்து கொண்டார்கள். (யோவா 17:24-25)

# 54-வது உலக சமூகத்தொடர்பு தினத்திற்காகத் திருத்தந்தை வழங்கியச் செய்தி

## (சுருக்கம்)

## நீ உன் மக்களுக்கும் உன் மக்களின் மக்களுக்கும் விவரித்துச் சொல்வீராக (விப 10:2)

## வாழ்வு வரலாறாக மாறுகிறது

### உலக சமூகத் தொடர்பு நாள்

நாம் ஒருவர் ஒருவரோடு தொடர்புகொள்ளவும், ஒருவருக்கொருவர் உதவி செய்யவும், சமூகத் தொடர்பு சாதனங்களும் சமூக வலைத் தளங்களும் உதவுகின்றன என்பதை உணரும் அதே வேளையில், இந்த சாதனங்களும் வலைத்தளங்களும், அரசியல் மற்றும் வர்த்தக உலகங்களுக்கு உதவி செய்கின்றன என்பதை நம்மால் மறுக்க இயலாது.

'வலை' என்ற சொல், ஓர் உருவகமாகப் பயன்புத்தப் படுகிறது. பல்வேறு கயிறுகள், அல்லது நூல்கள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து, வலைகள் உருவாக்கப்படுவது போல், மனிதர்களும் ஒருவரோடொருவர் இணைவதற்கு, நமது வலைத்தளங்கள் உதவி செய்ய வேண்டும்.

மனிதர்கள் ஒருவரை ஒருவர் நேருக்கு நேர் சந்திப்பதே உண்மையான சந்திப்பு என்றாலும் இத்தகையச் சந்திப்பிற்கு நம் சமூக வலைத்தளங்கள் உதவியாக இருக்க வேண்டும் என்பதே இன்றைய எதிர்பாரப்பு.

வலைத்தளங்கள், நம்மைத் தனிமைப்படுத்தாமல், ஒருவரோடு ஒருவரை இணைக்கவும், உலக மக்கள் கூடி வந்து ஒன்றித்து வாழவும், ஒருவருக்கொருவர் உதவவும் பயன்படுத்தப்பட்டால், நமது வலைத்தளங்களின் முழு பயனை நாம் பெறமுடியும்.

1967-ஆம் ஆண்டு, புனிதத் திருத்தந்தை 6-ம் பவுல் அவர்கள், சமூகத் தொடர்பு உலக நாளை நிறுவினார் என்பது குறிப்பிடத் தக்கது.

இன்று, இந்த உலக சமூகத் தொடர்பு உலக நாளைக் கொண்டாடும் வேளையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்

**நீ உன் மக்களுக்கும் உன் மக்களின் மக்களுக்கும் விவரித்துச் சொல்வீராக (விப 10:2)**

எனும் கருத்தோட்டத்தில் வெளியிட்டுள்ள அவரது செய்தியை வாசித்தறிவோம்

'கதை சொல்லுதல்' எனும் கருப்பொருளுக்கு இந்த ஆண்டின் செய்தியை அர்ப்பணிக்க விரும்புகிறேன். நல்ல கதைகளில் உள்ள உண்மையை நாம் நமதாகக்கிக் கொள்ள வேண்டும் என்பதை நான் நம்புகிறேன். இதன் வழியாக நாம் திசைமாறாமல் இருக்க முடியும். நம்மைச் சுற்றியுள்ள குரல்கள் மற்றும் செய்திகளின் மத்தியில் நம்மைப் பற்றியும் நம்மைச் சுற்றியுள்ள அழகைப் பற்றியும் பேசக்கூடிய ஒரு மனிதக் கதை நமக்குத் தேவை. அது நம் உலகத்தையும் அதன் நிகழ்வுகளையும் மென்மையான பார்வையுடன் காணக்கூடிய ஒரு கதையாக இருக்க வேண்டும். நாமும் நமது வாழ்வும் ஒன்றோடொன்று இணைந்த நாடாவின் ஒரு பகுதி என்று சொல்லக்கூடிய ஒரு மனித கதை நமக்குத் தேவைப்படுகிறது.

### I. உருவாக்கக் கதைகள்

நமது உருவாக்கக் கதைகளின் உள்ளடக்கம் நமது நம்பிக்கைகளையும் நடத்தையையும் பாதிக்கின்றன. நாம் யார் என்பதைப் புரிந்துகொள்வதற்கும் தொடர்பு கொள்வதற்கும் அவை நமக்கு உதவக் கூடியதாகவும் உள்ளன.

### 2. எல்லா கதைகளும் நல்ல கதைகள் அல்ல

பெரும்பாலும் தொடர்பு வலைத்தளங்களில், சமூக உறவுகள் மற்றும் பண்பாட்டு இணைப்புகளை வலுப்படுத்த உதவும் ஆக்கபூர்வமான கதைகளுக்குப் பதிலாக, ஒரு சமூகமாக நம்மை ஒன்றிப்பதில் பலவீனமான, ஆத்திரமூட்டும் கதைகளைக் கேட்கிறோம். பரிசோதித்து அறியப்படாத பொய் தகவல்களை ஒன்றாக இணைப்பதன் மூலம், சாதாரணமான மற்றும் ஏமாற்றும் வகையில் வாதங்களை படைப்பதன் மூலமும், கடுமையான மற்றும் வெறுக்கத்தக்க செய்திகளை அனுப்புவதன் மூலமும், மனித வரலாற்றை நல்வழிப்படுத்த நாம் உதவ மாட்டோம், மாறாக மற்றவர்களின் கண்ணியத்துக்குக் குழிபறிப்போம்.

### 3. கதைகளின் கதை.

மறை நூல் என்பது கதைகளின் கதை. இது நம் முன் பல நிகழ்வுகள், மக்கள் மற்றும் தனிநபர்களை வெளிப்படுத்துகின்றது. படைப்புகளைப் பற்றியக் கதையைச் சொல்லும் கடவுளை இது ஆரம்பத்திலிருந்தே நமக்குக் காட்டுகிறது. உண்மையில், கடவுள் அவருடைய வார்த்தைகளை உரைக்க, அனைத்தும் படைக்கப்பட்டன. ( தொ.நூ 1). ஒரு படைப்பாளராகக் கடவுள் அனைத்தையும் வாழ்வுக்கு அழைக்கிறார். ஆணும் பெண்ணும் அவரோடு உரையாடும் படைப்புகளாக அவர் உருவாக்கினார். இந்த படைப்பின் உச்சகட்டமாக அவருடன் ஒரு வரலாற்றை ஏற்படுத்தினார். 139: 13-15 திருப்பாடலில், படைப்பானது படைத்தவரைப் பாரத்து,: "என் உள் உறுப்புகளை உண்டாக்கியவர் நீரே! என் தாயின் கருவில் எனக்கு உருதந்தவர் நீரே! அஞ்சத்தகு, வியத்தகு முறையில் நீர் என்னைப் படைத்ததால், நான் உமக்கு நன்றி நவில்கின்றேன்; உம் செயல்கள் வியக்கத்தக்கவை என்பதை என் மனம் முற்றிலும் அறியும். என் எலும்பு உமக்கு மறைவானதன்று; மறைவான முறையில் நான் உருவானதையும் பூவுலகின் ஆழ்பகுதிகளில் நான் உருப்பெற்றதையும் நீர் அறிந்திருந்தீர்" . என்றுரைத்தது. நாம் முழுமையானவர்கள் அல்ல, ஆனால் நாம் தொடர்ந்து 'கோர்க்கப்பட்டு', ஒன்றாகப் பின்னப்பட்டிருக்க வேண்டும்.

இந்த ஆண்டின் செய்தியின் தலைப்பு விடுதலைப் பயணம் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இது ஒரு தொடக்கக் கால விவிலியக் கதையாகும், அதில் கடவுள் தனது மக்களின் வரலாற்றில் தலையிடுகிறார். இஸ்ரயேல் அடிமைப்படுத்தப்பட்ட மக்களாக அவரிடம் கூக்குரலிடும்போது, கடவுள் அதைக் கேட்டு நினைவு கூர்ந்தார்: "அவர்களது புலம்பலைக் கடவுள் கேட்டார். ஆபிரகாமுடனும், ஈசாக்குடனும், யாக்கோபுடனும் தாம் செய்திருந்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார். கடவுள் இஸ்ரயேல் மக்களைக் கண்ணோக்கினார். அவர்களது நிலைமைகளையும் கடவுள் அறிந்து கொண்டார்." (விப 2:24-25)

கடவுளின் நினைவுகூர்தலானது, தொடர்ச்சியான அறிகுறிகள் மற்றும் அற்புதங்கள் மூலம் இஸ்ரயேல் மக்களுக்கு ஒடுக்குமுறையிலிருந்து விடுதலையைக் கொண்டுவந்தது. இந்த எல்லா அறிகுறிகளின் அர்த்தத்தையும் ஆண்டவர் மோசேவுக்கு வெளிப்படுத்தினார்.




நற்செய்தியாளர்கள் இயேசுவைப் பற்றி சொல்லும் போது, அவர்கள் அவர்களது செய்திகளை அறிந்துக் கொள்ளக் கூடியச் செய்திகளாக மட்டுமல்ல - நமது வாழ்வை மாற்றும் கதைகளாகக் கூறினார்கள். யோவானின் நற்செய்தி- வார்த்தை - அது தானே மனுவுருவான கதையைக் கூறுகிறது: "தந்தையின் நெஞ்சத்திற்கு நெருக்கமானவரும் கடவுள் தன்மை கொண்டவருமான ஒரே மகன் அவரை வெளிப் படுத்தியுள்ளார்" (யோவான் 1: 18) என்று கூறுகிறது. கடவுள் நம்முடைய மனிதகுலத்தில் தனிப்பட்ட முறையில் இணைந்துள்ளார். அவரே நம் கதைகளையும் எடுத்துக்கூற புதிய வழியைக் கொடுத்திருக்கிறார்.

### 4. எப்போதும் புதுப்பிக்கப்பட்ட கதை

கிறிஸ்துவின் வரலாறானது, கடந்த காலத்திலிருந்து வந்த ஒரு மரபு கதை அல்ல. அது நமது கதை, நமது காலத்துக்கும் ஏற்ற கதை. கடவுள் மனிதகுலத்தின் மீதும், நமது உடல் மீதும், நமது வரலாற்றின் மீதும், மனிதராகவும், உடலாகவும் வரலாறாகவும் ஆனார்.

ஒவ்வொரு நபரின் வரலாற்றிலும், பூமிக்கு வந்த தன் மகனின் கதையை தந்தை மீண்டும் காண்கிறார். ஒவ்வொரு மனிதக் கதையிலும் அடக்க முடியாத கண்ணியம் இருக்கிறது.

### 5. நம்மைப் புதுப்பிக்கும் கதை

நமது கதையான நற்செய்தியை வெறுமனே கூறுவது நம்மை விளம்பரப் படுத்திக்கொள்ள அல்ல. மாறாக, 'மரியா இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.' (லூக்கா2:19) என்று கூறப்பட்டுள்ளதைப் போல், கடவுளின் பார்வையில் நாம் யார், நமது பொறுப்பு என்ன என்பதை நினைவில் வைத்துக் கொள்வதற்காகவுமாகும்.

*ஒரு பெண்ணும் தாயுமாகிய அன்னை மரியாளே, , உமது வயிற்றில் இறை வார்த்தையை நெய்தீர். கடவுளின் அற்புதமான செயல்களை உங்கள் வாழ்க்கையால் விவரித்தீர். எங்கள் கதைகளைக் கேளுங்கள், யாரும் கேட்க விரும்பாத எங்கள் கதைகளை உமது இதயத்தில் பதித்து, உங்களது சொந்தமாக்கிக் கொள்ளுங்கள். பின்னிப் பிணைந்திருக்கும் எங்கள் கதைகளின் ஒவ்வொரு முடிச்சையும் உமது மென்மையான கைகளால், அவிழ்த் தருளும். நம்பிக்கையின் தாயே, எங்களுக்கு ஊக்கமளித் தருளும். அமைதியின் கதைகள், எதிர்காலத்தை சுட்டிக்காட்டும் கதைகள் ஆகியவற்றை உருவாக்க எங்களுக்கு உதவுவீராக. நாங்கள் ஒன்றாக வாழ்வதற்கான வழியை எங்களுக்குக் காட்டுவீராக.*

*ஆமென்*

# 'சீரழியும் சிங்காரத் தோட்டம்' நமது பொது இல்லம்

## Laudato Si-5 ஆம் ஆண்டு நிறைவு- சிறப்பு கட்டுரை

**சிங்காரத் தோட்டத்தின் சீரழிவு**

*சென்ற வாரத் தொடர்ச்சி*

நம் அனைவரின் பொது இல்லத்திற்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது ?

1. இன்றைய மனிதகுலம்:

- தற்போதைய சுற்றுச் சூழல் பற்றிய பகுப்பாய்வில் ஆழமாக ஈடுபடவில்லை.

-உலகத்தின் படைப்பு பற்றிய இறையியல், உலகம் பற்றிய தத்துவயியல் ஆகியவை பழமையானதாக உள்ளது.. இத்துறைகளில் மனிதக்குலம் முனைப்புக் காட்ட வேண்டும்.

-மேற்கண்ட துறைகளிலான ஆய்வுகளில் மனிதனை அல்ல கடவுளின் தூய படைப்பை மையமாக வைத்துச் செயல்பட வேண்டும். இது காலத்தின் கட்டாயம்.

"எனவே, மனுக்குலம் முழுமைக்கும் பொது இல்லமாக விளங்கும் இந்த புவிக்கு என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதை எடுத்துரைக்கும் முயற்சியில் என் சிந்தனையைச் செலுத்தி இம்மடலை எழுதுகிறேன்" என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

**தூய்மைகேடு, வீணடித்தல் , தூக்கி எறியும் கலாச்சாரம் (Pollution, waste & Throwaway culture)**

-மனிதன் மாறிவிட்டான். அவன் கொணர்ந்த மாற்றங்கள் இன்று அவனையே வாட்டுகிறது.

- காற்று மண்டலத்தில் ஏற்பட்டுவரும் தூய்மைகேடு, நாளுக்கு நாள் பெருகி அபாய நிலையை எட்டி வருகிறது.

- சமைக்கப் பயன்படுத்தப்படும் எரிபொருள் (Propane Gas) முதற்கொண்டு, வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் கக்கும் அளவற்ற விஷப் புகை காற்றோடு கலந்த அதன் தூய்மைக்கு கேடுவிளை விக்கிறது.

- மனிதன் உயிர் வாழ காற்றின் தூய்மை இன்றியமையாதது.

- காற்றின் தூய்மைகேட்டால் காற்று மட்டுமல்ல, நீரும், நிலமும் கூட அழிவை எதிர்நோக்கியுள்ளது.

- பயிரிடப்படும் காய்கறிகள், கீரை வகைகள், பழமரங்கள் போன்றவற்றில் தெளிக்கப்படும் பூச்சிக்கொல்லி மருந்து களும், இரசாயன உரங்கள் ஆகியவை பயிர்களை மட்டுமல்ல, நிலத்தையும், நீரையும் மாசுபடுத்துகின்றன.

- இவை நிலம் வாழ் சிறு பிராணிகளையும், உயிர் அணுக்களையும், நீர்வாழ் பிராணி களையும் அழிக்கின்றன.

-அதிகம் அதிகமான ஏழைகள் கொடிய நோய்களுக்கு ஆளாகிறார்கள், மடிகிறார் கள்.

-அறிவியல் தொழில்நுட்பம் வளர்ந்தாலும் அத்தோடான பிரச்சனைகளும் வளர் கின்றன

**பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் விளைவுகள்**

-பருவநிலை என்பது உலக மாந்தர் உட்பட படைப்பனைத்துக்குமான ஒரு பொதுச் சொத்து.

- இக்காலத்தில் இந்த பருவநிலையானது பெரும் பாதிப்புக்குள்ளாகி உள்ளது. உலக அமைதியை மிகவும் சீரழிக்கக் கூடிய இந்த பருவநிலை பாதிப்பினால் சுற்றுச் சூழலுக்குக்கான காய்ச்சலைக் கூடிக் கொண்டே போகிறது.

நம் கண்ணுக்குத் தெரியாமல் ஓசோன் படலம் மெலிவடைந்து கொண்டிருக்கிறது என்றும், இவற்றை மனதிற்கொண்டு, பருவநிலை மாற்றங்களுக்குக் காரண மாயிருக்கக்கூடிய மனித காரணங் களையாவதுக் குறைக்க முயல வேண்டும்.

பருவகால மாற்றத்தினால் மலேரியா, டெங்குகாய்ச்சல், மஞ்சள் காய்ச்சல் போன்ற வெப்ப மண்டல நோய்கள் குளிர்பிரதேசங்களுக்கும், காலரா, வயிற்றுப் போக்கு போன்ற தண்ணீரால் வரும் நோய்கள் வெப்ப மண்டலங்களுக்கும் இடம் மாறும். வாய்ப்புண்டு.

*தொடரும்*

*ஆர்.கே.*

# திருஅவையில் இலாப நட்ட கணக்கைவிட பணியாற்றுவது முக்கியம்

**வத்திக்கான்**: வத்திக்கான் நிதி நிலைமை என்று பேசும்போது, அதை, வெறும் இலாப, நட்டம் என்ற கண்ணோட்டத்தில் மட்டும் காண்பது சரியல்ல என்கிறார் - அருள்பணி குய்ரெய்ரோ.

வத்திக்கான், இலாப நட்ட கணக்குப் பார்க்கும் ஒரு தொழில் நிறுவனம் அல்ல. இது, மக்கள் வழங்கும் நன்கொடையில் இயங்கும் அமைப்பு என்று, திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

திருப்பீடத்தின் நிதித்துறையின் தலை வராக சில மாதங்களுக்கு முன் பொறுப் பேற்ற இயேசு சபை அருள்பணியாளர் Juan Antonio Guerrero Alves அவர்கள், வத்திக்கான் செய்தித்துறைக்கு எழுத்து வடிவில் வழங்கிய ஒரு பேட்டியில் இவ்வாறு



*அருள்பணியாளர் Juan Antonio Guerrero*

கூறியுள்ளார்.

கோவிட் 19 நெருக்கடியையொட்டி, திருப்பீடத்தின் அனைத்து துறைகளும் மேற்கொண்ட ஒரு சந்திப்பில், திருப் பீடத்தின் தற்போதைய நிதி நிலைமை குறித்து, அருள்பணி Guerrero அவர்கள் அளித்த விளக்கத்தை வைத்து, வத்திக்கான் நிதி நிலைமை மிகவும் சரிந்துவிட்டதாக செய்தியொன்று வெளியானதைத் தொடர்ந்து, வத்திக்கான் செய்தித்துறை அருள்பணி Guerrero அவர்களுடன் இந்த பேட்டியை மேற்கொண்டது. நிதிபற்றாக் குறையால் அல்லலுறும் பல்வேறு நிறுவனங்களில் மத்தியில் வத்திக்கான் இதற்கு விதிவிலக்கல்ல.

உலகெங்கும் நிதி நிலைமை தடுமாறிவரும் வேளையில், வத்திக்கானும் அத்தகைய ஒரு நெருக்கடியைச் சந்திக்கிறது என்பதை தன் பேட்டியில் தெளிவாகக் குறிப்பிட்ட அருள்பணி Guerrero அவர்கள், நிதி நிலைமை என்று பேசும்போது, அதை, வெறும் இலாப, நட்டம் என்ற கண் ணோட்டத்தில் மட்டும் காண்பது சரியல்ல என்று குறிப்பிட்டார்.

திருப்பீடம் ஒரு திருப்பணியில் ஈடுபட்டுள்ளது என்பதால், அதன் செயல்பாடுகளை, கூடுதல் நிதியிருப்பு என்ற அளவுகோல் கொண்டு சிந்திக்கக் கூடாது என்றும், வத்திக்கானின் நிதித் துறை, ஒளிவு மறைவற்ற முறையில் தன் செயல்பாடுகளை நிகழ்த்துவது அதன் முக்கிய குறிக்கோள் என்றும் அருள்பணி Guerrero அவர்கள் தன் பேட்டியில் வலியுறுத்திக் கூறினார்.

2016-ஆம் ஆண்டு முதல், 2020-ஆம் ஆண்டு வரை, திருப்பீடத்தின் வரவும், செலவும் நிலையான ஓர் அளவில் இயங்கி வருவதாகத் தெரிவித்த அருள்பணி Guerrero அவர்கள், ஒவ்வோர் ஆண்டும், இத்தாலிய அரசுக்கு திருப்பீடம் 17 மில்லியன் யூரோக்கள், அதாவது, ஒரு கோடியே 70 இலட்சம் யூரோக்கள் வரி செலுத்தி வருகிறது என்பதையும் தெரிவித்தார்.

திருத்தந்தையின் உரைகள், செயல் பாடுகள் அனைத்தையும் உலகிற்கு எடுத்துச் செல்லும் வத்திக்கான் சமூகத் தொடர்புத் துறை, உலகெங்கும் செயல்படும் திருப்பீடத் தூதரகங்கள் ஆகியவை, எவ்வகையிலும் வருமானம் ஈட்டாத துறைகள் என்றும், ஆனால், அவை மேற்கொள்ளும் பணிகள், திருப்பீடத்திற்கு மிகவும் முக்கியமான பணிகள் என்றும் நிதித்துறையின் தலைவர், அருள்பணி Guerrero அவர்கள் தன் பேட்டியில் விளக்கமளித்தார்.

ஜெரோம் லூயிஸ் - வத்திக்கான் செய்திகள்

# ஆண்டவரின் உயிலுக்கு உரியவராவோம்

இன்றைய நற்செய்தியில் 9-ஆம் வசனத்தில் அவர் வானத்தை அண்ணாந்து பார்த்து "அவர்களுக்காக நான் வேண்டு கிறேன். உலகிற்காக அல்ல, மாறாக நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களுக்காகவே வேண்டுகிறேன். அவர்கள் உமக்கு உரியவர்கள்" என இயேசு தம் சீடர்களுக் காக உருக்கமாக வேண்டுகிறார்.

இதிலிருந்து தேர்ந்தெடுத்தச் சீடர்கள் நிலைவாழ்வில் நிலைத்து நிற்க தந்தையிடம் அவர்களை ஒப்படைத்து மன்றாடுகிறார். காரணம் அவரிடம் ஒப்படைத்தவர்கள் யாவரையும் அவர் அழிவு பெறாது காத்து வந்தார். அத்தோடு அல்லாது மேலும் சீடர்கள் பணிக்காக அர்பணித்து வாழ வேண்டும் என்பதற்காகவும், ஒற்றுமைக் காகவும் ஆழ்ந்து வேண்டுகிறார்.

இவ்வாறு தந்தையிடம் வேண்டும் இயேசு நம்மையும் தந்தையிடம் வேண்டச் சொல்கிறார். நாமும் நம்முடைய அன்றாட வாழ்வில் தந்தையை நோக்கி இறைவேண்டல் செய்ய அழைக்கிறார். நமது இறைவேண்டல் எத்தகையதாக இருத்தல் வேண்டும் எனவும் விவரிக்கும் இன்றைய நற்செய்தி நாம் எவ்வாறான வழ்க்கையின் நிமித்தம் இறைமாட்சிக்கு புகழ்சேர்க்கும் சொல், செயல், கடமை ஆகியவற்றுள் பாடுகளை ஏற்றுகொண்டு சாட்சியம் கூறும் நம்பிக்கையாளர்களாக விளங்குகிறோமோ அந்த அளவுக்கு நாம் இறைமக்களில் பேறுபெற்றவர்களாக திகழ்வோம் என பேதுரு எழுதிய திருமுகத்தில் காண்கிறோம்.

திருத்தூதுப் பணியிலே திருத்தூதர்கள் மற்றும் சீடர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஒருமனதோராய் இறைவேண்டலில் ஈடுபட்டிருந்தார்கள் என வாசிக்கிறோம். ஆம். நாமும் இன்றைய வாழ்க்கைச் சூழலிலே அதாவது நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையின் கீழ் வீட்டிலேயே இருக்கும் நமக்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது இதுவும் இறைதிட்டமாகக் கூட இருக்கலாம். எனவே, இப்போது உள்ள நேரத்தில் நாமும் நமது நேரத்தை இறைவார்த்தையை வாசிப்பதிலும், தியானிப்பதிலும், இறைவேண்டல் செய் வதிலும், குறிப்பாக குடும்பத்துடன் ஒன்றாய் அமர்ந்து இறைவேண்டல் செய்ய ஈடுபடுத்திக்கொள்ள அழைக்கப்படுகிறோம். பெருவாரியாக உலக முழுக்க இறை பணியாளர்கள் தொலைகாட்சி மூலமாக, கைதொலைபேசியின் காணொளி மூலமாக செபிக்க நேரத்தை ஒதுக்கி செபித்துக் கொண்டிருப்பதையும் அறிந்துள்ளோம். திருத்தந்தையும் கடந்த 14-ஆம் திகதி இறைவேண்டல் நாளாகவும் பிரகடனப் படுத்தி இறைவேண்டலில் அனைவரும் பங்குக் கொள்ளுமாறு அழைப்பு விடுத்ததும் நாம் செபத்தில் நிலைத்துநிற்க வேண்டும் என்பதே. கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக கட்டுப்பாட்டு விதியின் கீழ் வீட்டிலேயே அடைபட்டிருக்கும் இந்த நல்ல தொரு தருனத்தில் இறை வேண்டுதலில் நாம் ஈடுபட்டு உகந்த சீடர்களாக திகழ நாம் பக்தி முயற்சியில் முழுமனதோடு ஈடுபடுவோம்.

அடுத்து, உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும் நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நிலைவாழ்வு என்கிறார் இயேசு. நிலைவாழ்வு என்பது நாம் இறந்தவுடன் கிடைப்பதாக நாம் எண்ணிக்கொண்டிருக்கிறோம்.ஆனால், இம்மை வாழ்வில் இயேசுவை எந்தளவுக்கு அறிந்து அவரது அன்பில் நிலைத்திருக் கிறோமோ அந்தளவுக்கு நமது நிலைவாழ்வு உறுதியாகிறது என்பதை நாம் உணர வேண்டும். மேலும் கடவுளின் திருப் பெயரை இயேசு நமக்கு வெளிப்படுத் தியுள்ளார். எனவே, அவரது திருப் பெயருக்கு மாட்சி சேர்க்கும் பிள்ளை களாகவும் நாம் இவ்வுலகில் வாழ்ந்துகாட்ட வேண்டும்.

இன்றைய நற்செய்தியை இயேசுவின் உயில் என்றுகூட நாம் சொல்லலாம். நமக்காக தந்தையிடம் பரிந்து பேசி அவர் எழுதிய உயிலாக இது அமைந்துள்ளது. அவரது உயிலில் நமக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை வரையறுத்துள்ளார் இயேசு.

*ஆவி. டேவிட், குளுவாங்-*

**பாஸ்கா காலம் ஏழாம் ஞாயிறு**

திப: 1 : 12-14
திருப்பாடல்: 27: 1, 4. 7-8அ
1 பேதுரு: 3: 13-16
யோவான்: 17: 1-11

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் 3**